*(அரசாங்க/ பகுதியளவு அரசாங்க ஊழியர்கள்/வெளியார்)*

முடிவுத் திகதி - *28.09.2026*

# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கீழ் குறிப்பிடப்படும் திட்டங்களின் பின்வரும் பதவிகளுக்கு அரசாங்க/ பகுதியளவு அரசாங்க ஊழியர்கள் உட்பட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த நியமனங்கள் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் *2026.03.28* ஆந் திகதி வெளியிடப்பட்ட *02/2026* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்

| திட்டத்தின் பெறுமதி (ஐ.அ.டொ. மில்லியன்) | திட்டத்தின் பெயர் | **பதவிப் பெயர்** | **சம்பள வகுதி 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கைக்கு ஏற்பவாகும்** | **வெற்றிடங்கள் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| அமெரிக்க டொலர் 200 மில்லியனுக்கு அதிக அல்லது அதற்கு சமமான வகுதி | மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் III (CEP III) | கொள்முதல் நிபுணர் | C | 01 |
| 25 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட மற்றும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பார்க்கிலும் குறைந்த அல்லது அதற்கு சமமான வகுதி | கண்டி பல்நோக்கு போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் (KMTTDP) | போக்குவரத்து உத்தியோகத்தர் | F | 01 |
| | | வரைவாளர் (Draughtsman) | F | 01 |

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள *02/2026* ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம், கொள்முதல் நிபுணர் வகுதி *C* அடிப்படைத் தகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. [கீழுள்ள (1) அல்லது (2)]**

**கொள்முதல் நிபுணர் - வகுதி C**

01. தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டம்

மற்றும்

சம்பந்தப்பட்ட துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் (முதுமானி) / சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை அல்லது அதனையொத்த தொழிற் தகைமை

அத்துடன்

குறித்த துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம்.

02. தொடர்புடைய துறையில் அரசின் அகில இலங்கைச் சேவையில் வகுப்பு I அல்லது அதற்கு ஒத்த நிலைமையுடைய அதிகாரி.

மற்றும்

சம்பந்தப்பட்ட துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் (முதுமானி) அத்துடன்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

*தொடர்புடைய துறையில் வகுப்பு 1 பதவியில் அல்லது அதற்கு ஒத்த நிலைமையில் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம்*

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள *2/2026* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கையின் இணைப்பு *01* இன் படி, போக்குவரத்து உத்தியோகத்தர், வரைவாளர் *(Draughftsman) (F) (25- 200* மில்லியன் ஐ.அ. டொ. வகுதி) அடிப்படைத் தகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

***குறைந்தபட்ச தகுதிகள் மற்றும் அனுபவம் [கீழுள்ள (1) அல்லது (2) அல்லது (3)]***

***01.***

- *தொடர்புடைய துறையில் பட்டப்படிப்பு அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தொடர்புடைய துறையில் பட்டப்படிப்பிற்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்ட தகைமை.*

*அல்லது*

- *தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதி நிலை 7க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.*

*மற்றும்*

- *தேவையான விசேட துறையில் குறைந்தது 02 ஆண்டுகள் அனுபவம்.*

***02.*** *தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதி நிலை 6க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.*

*மற்றும்*

- *தேவையான விசேட துறையில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம்.*

***03.*** *தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதி நிலை 5க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.*

*மற்றும்*

- *தேவையான விசேட துறையில் குறைந்தது 08 ஆண்டுகள் அனுபவம்.*

***பொதுவான நிபந்தனைகள்:***

- *ஆட்சேர்ப்பு, சம்பளம், நன்மைகள் மற்றும் பிற சேவை நிபந்தனைகள் நிதி அமைச்சினால் 2026.03.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படியாகும்.*
- *தெரிவுகள் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மற்றும் ஏனைய சுற்றறிக்கை நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்கும்.*

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

- அனைத்து விண்ணப்பங்களும் இந்த சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி நிரப்பப்பட வேண்டும் என்பதோடு, தொடர்புடைய ஆவணங்களின் அனைத்து பிரதிகளும் அனுப்பப்பட வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தால், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தேவையெனில் சம்பந்தப்பட்ட பகுதி மற்றும் / அல்லது நாட்டின் எந்த இடத்திலும் பணியாற்ற சம்மதிக்க வேண்டும்.

**01. வயது வரம்பு:**

- அரச, பகுதியளவு அரச உத்தியோகத்தர்களுக்கு 60 வயதிற்கு கீழ்
- ஏனையவர்களுக்கு 64 வயதிற்கு கீழ்

**02. சம்பளம்:**

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும்.

**03. வேலைவாய்ப்பு விதிமுறைகள்:**

- இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையிலானது.
- விண்ணப்பதாரர் ஏற்கனவே அரச, பகுதியளவு அரச நிறுவனங்களில் ஒரு நிரந்தரப் பதவியை வகித்தால், 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் பத்தி 2.3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள, நிலையான பதவியின் நியமன அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பரிசீலிக்கப்படும் சரியான விடுவிப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.
- விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்யாத மற்றும் விண்ணப்பத்துடன் சரியான தகவல்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள், மற்றும் 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் பிற தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் நியமனங்களுக்காக கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.
- நியமனங்களை வழங்குதல் அல்லது வழங்காதிருத்தல் மற்றும் சேவை நீடிப்புகள் குறித்த முடிவு சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுளின்படி அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் படியானதாகும்.

**04. நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

நிரந்தரப் பதவியொன்றில் தற்போது பணியாற்றும் பொது சேவை / மாகாணப் பொது சேவை, உள்ளூராட்சி நிறுவனங்கள் / அரசாங்க அதிகார சபைகள் / நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், 02/2026 MSD சுற்றறிக்கையின் 2.3.3 ஆம் பந்திக்கு அமைவாக, தமது அடிப்படைப் பதவியிலிருந்து விடுவிப்பதற்கான சம்மதத்துடனும், விடுவிப்பதற்கான அடிப்படையைப் பரிந்துரைக்கும் நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடனும், தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும். (இல்லாதபட்சத்தில், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.)

*05.* **விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்**

*கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள், கல்வித் தகுதிகள், அடிப்படை பட்டத்தின் பிரதி, பணி அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன், கடித உறையின் மேல் இடது மூலையில் விளம்பரத்தில் உள்ள பதவி மற்றும் கருத்திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு, பதிவுத் தபாலில்* ***செயலாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, "மகனெகும மகமெதுர", இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல*** *என்ற முகவரிக்கு* ***2026.09.28*** *ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் அல்லது அமைச்சின் நிர்வாகப் பிரிவில் கையளிக்கப்பட வேண்டும்.*

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

*06.* **விசேட கவனத்திற்கு**

- ***தரப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.***
- ***விண்ணப்பத்துடன் சான்றுப்படுத்திய பிரதிகளைச் சமர்ப்பித்த தகைமைகள் மட்டுமே தெரிவுக்காக கவனத்திற் கொள்ளப்படும்.***

*07.* ***ஏதேனும் விசாரணைக்கு தயவுசெய்து பின்வரும் இலக்கத்தை தொடர்பு கொள்ளவும் - 011-2271048***

*08.* ***சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடகங்களில் வெளியிடப்பட்ட இந்த விளம்பரத்தின் மொழி சொற்றொடர்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், சிங்கள விளம்பரத்தில் உள்ள விடயங்களே மேலோங்குதல் வேண்டும்.***

*விண்ணப்ப மாதிரி - இணைப்பு 1*

***செயலாளர்***
***போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு***

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED